# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2017/31 - 2017 මැයි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.05.04

*2017/31 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 3/2013* (II)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க,வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க,வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டஒழுங்குவிதிகள்.*

*அர்ஜுன ரணதுங்க,*
*துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2017,மே 02.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறியவர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) சரக்கு அல்லது பயணிக் கலன்களாக இருப்பனவும், நீளத்தில் ஐந்து மீற்றர்களுக்குக் குறையாதனவாகவும் இருபத்தி நான்குமீற்றர்களுக்குமேற்படாதனவும், 100 பயணிகளுக்குமேற்படாதோரைக் கொண்டு செல்கின்றனவும், அல்லது இலங்கையின் கரையோரநீர்ப்பரப்புகளில்ஈடுபட்டுள்ளவர்களும், இருபத்திநான்குக்கு மேற்படாதவர்களுமானபயணிகளுக்கு இரவில் தங்கியிருப்பதற்கான இடவசதியை வழங்குகின்றனவு மானவர்த்தகக் கலன்கள்; அத்துடன்

(ஆ) இலாபத்துக்காக அல்லது வெகுமதிக்காகப் பயன்படுத்தப்பட்ட பொழுதுபோக்குக் கலன்கள்.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. இவ்வொழுங்குவிதிகள் எந்தக் கலனுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்தக் கலன் ஒவ்வொன்றும், கப்பல்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியானபதிவுச் சான்றிதழையும் வணிக கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டஆய்வுச்சான்றிதழொன்றையும் அதன்மீது வைத்திருக்காமல் தொழிற்படுத்தப்படுதலாகாது.

4. (1) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி, வணிக கப்பற்றொழில் பணிப்பாளர்தலைமையதிபதியினால் உருவாக்கப்பட்டசிறிய வர்த்தக கலன்களுக்கான காப்புக் கோவையில் குறித்துரைக்கப்பட்டவாறாக அதையொத்ததராதரங்களைக் கொண்ட ஒரு வெளிநாட்டின் கலனொன்றைச் சோதனை செய்வதன்மேல்,அத்தகைய ஆய்வுச் சான்றிதழ் அல்லது அப்பொருள்பட்ட ஒத்தசான்றிதழ், கலனின் மற்றும் அதனது கருவிகளின் நிபந்தனைகளுடன் நேரொத்ததாக விருப்பின், அத்தகைய வெளிநாட்டுகலனொன்றின் அப்பயன்படும் ஆய்வுச் சான்றிதழை அல்லது அதையொத்த சான்றிதழை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) அத்தகைய சோதனையின்மேல், அத்தகைய வெளிநாட்டின் கலனொன்றின் அத்தகையஆய்வுச் சான்றிதழ் அல்லது அதையொத்த சான்றிதழ் கலனின் நிபந்தனைகளுடன் நேரொத்ததாகவிருப்பதில்லையென வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி காணுமிடத்து,அத்தகையகலன் இலங்கையில் பதிவுசெய்யப்படுதலாகாது.

5. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் கலனொன்றைப் பதிவுசெய்வதற்குவிரும்புகின்றஆள் ஒவ்வொருவரும், இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவொரு கட்டணத்துடன் சேர்த்து இவ்வொழுங்குவிதிகளின் அட்டவணைI இல் தரப்பட்டுள்ள படிவத்தில் முப்பிரதிகளில் விண்ணப்பித்தல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர், விண்ணப்பமொன்றுடன் சேர்த்து பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டஆய்வுச் சான்றிதழ் ;

(ஆ) அத்தகையகலன் கொண்டுசெல்வதற்கு உரித்துடையதாகவுள்ளஅதன் கப்பற்றொகுதி உறுப்பினர்களையும்,பயணிகளையும், சரக்கையும் காப்பீடுசெய்து, இலங்கைக் காப்புறுதிச் சபையினால் அங்கீகரிக்கப் பட்டவொரு காப்புறுதிக் கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட கலத்துக்கான பீ மற்றும் I ஐ அத்துடன் அதன் உடற்பகுதிமற்றும் எந்திரத்தொகுதிக்கான எல்லாமடங்கிய காப்புறுதிக் காப்பீடு;

(இ) கலத்தின் தலைவரினதும்,அலுவலர்களினதும்,கப்பற்றொகுதியினரினதும் பெயர்களும் தகுதியும் அவர்களின் நாட்டினமும்; அத்துடன்

(ஈ) விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவல்களுள் எவற்றிலுமான ஏதேனும் மாற்றம் தொடர்பாக,அத்தகைய மாற்றம் இடம்பெற்றதிலிருந்து ஒருமாத காலப்பகுதியினுள் கப்பல்கள் பதிவாளருக்கு அறிவிப்பதற்கு எழுத்திலான வொருபொறுப்பேற்பு.

7. விண்ணப்பம் பெறப்பட்டதன்மேல், கப்பல்கள் பதிவாளர், 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படிகலத்தைப் பதிவு செய்வதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் வேண்டு மென்பதுடன், பதிவுச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குதலும் வேண்டும்:

ஆயின், விண்ணப்பகாரர், அவரது விண்ணப்பத்தைச் செய்தநேரத்தில் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆவணங்களையும் காண்பிப்பதற்கு இயலாதவராகவிருப்பின், கப்பல்கள் பதிவாளர், அத்தகைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறியமை விண்ணப்பகாரரின் தவறுகை காரணமாகவல்லவெனத் திருப்திப்படுவதன் மீது-

(அ) கப்பல்கள் பதிவாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான வேறேதேனும் இயைபான ஆவணத்தை அதற்குப் பதிலாகக் காண்பிக்கும்படி விண்ணப்பகாரரைத் தேவைப்படுத்தலாம்; அல்லது

(ஆ) அதனைக் காண்பிப்பதற்கான தேவைப்பாட்டிலிருந்து விண்ணப்பகாரருக்கு விலக்களிக்கலாம்;

அத்துடன் அத்தகையவொரு கலம் தொடர்பில் மூன்று மாதக்காலப்பகுதிக்கான தற்காலிகப் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கலாம்.

8. தற்காலிகப் பதிவுச் சான்றிதழொன்றை வைத்திருப்பவர்,அத்தகையகலத்தைப் பதிவுசெய்வதற்காகத் தேவைப்படுத்தப்பட்ட அவசியமானஆவணங்களைத் தாமதமின்றிச் சமர்ப்பித்தல் அவரதுகடமையாதல் வேண்டும். அத்தகையஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவதன் மேல், விண்ணப்பகாரர், பதிவுச் சான்றிதழொன்றை வழங்கும்படி கப்பல்கள் பதிவாளரை எழுத்தில் கோருதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் கலத்துக்கு வழங்கப்பட்டபதிவுச் சான்றிதழ் ஓராண்டுக்காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும். ஆய்வுச் சான்றிதழானது, முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய ,சோதனைத் தேதியிலிருந்து,பன்னிரண்டுபயணிகளைக் கொண்டுசெல்கின்ற ஒரு கலத்தின் விடயத்தில் ஓராண்டுக்காலப்பகுதிக்கும் மற்றெல்லாக் கலன்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கும் செல்லுபடியுடையதாதல் வேண்டும், ஆயின் அக்கலன் சோதனை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்கின்றது.

10. சோதனைஒவ்வொன்றும்,வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வகுத்தமைக் கப்பட்ட சிறியவர்த்தகக் கலன்களுக்கானகாப்புக் கோவையின் நியதிகளின்படிநிறைவேற்றப்படுதல் வேண்டும். சிறிய வர்த்தகக் கலன்களுக்கானகாப்புக் கோவையானது, பொதுவானஏற்பாடுகள், நிர்மாணம், கலப்பக்கத்தின் பாகம்,நிலையுறுதியும் நீர்புகாத் திடத்தன்மையும்,எந்திரத்தொகுதி,தீப்பாதுகாப்பு,உயிர்க்காப்புச் சாதனங்கள்,நானாவித முறைமைகளும் சாதனத் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளும், படகுத் தலைவர்களுக்கும் பொறியியலாளர்களுக்கும் உரிமமளித்தல், ஆளமர்த்தலும் வேலை மணித்தியாலங்களும் என்பவற்றைக் கையாளுகின்றது.

11. இவ்வொழுங்குவிதிகள் எந்தக் கலத்துக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்தஏதேனும் கலம்,செல்லுபடியான ஆய்வுச் சான்றிதழொன்றை அல்லது செல்லுபடியானகாப்புறுதிச்சான்றிதழொன்றைஅதன்மீதுவைத்திருப்பதற்குத் தவறுமிடத்து,அத்தகையகலத்தின் சொந்தக்காரர், அத்தகைய சான்றிதழ்களைஅதன்மீது வைத்திருக்காமல் எந்தக் கலன் பயணஞ்செய்கின்றதோ அந்தக் கலன் தொடர்பில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாவான குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டாண்டுகளுக்கு விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொரு வகையினவான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

12. இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்குஏற்புடையனவாதலாகாது:-

(அ) மீன்பிடிக் கலன்கள்;

(ஆ) திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்க்காப்புமீதான சர்வதேசச் சமவாயத்தின் (க உ மீ ச ச) ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்டசெல்லுபடியான சர்வதேசப் பயணிக்கப்பல் காப்புச் சான்றிதழொன்றைவைத்திருக்கின்றவொரு கலன்; அத்துடன்

(இ) அவசர நிலைமைகளில் அல்லதுஅவசரப் பிரயோகங்களின்போதுமட்டுமேபயணிகளைக் கொண்டு செல்வதற்குப்பயன்படுத்தப்படும் கலஉயிர்க்காப்புச் சாதனத்தின் பாகமாகஅமைகின்றவொரு படகு.

13. 2016 ஒற்றோபர் 4 ஆந்திகதிய 1987/19 ஆம் இலக்க, அதிவிசேடவர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கானபயிற்சியளித்தல், சான்றளித்தல்,காவல் காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் எக்கலன்களுக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையதாகுமோ அக்கலன்களுக்கு ஏற்புடையதாதலாகாது.

14. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் என்று பொருளாகும் ;

"சிறிய வர்த்தகக் கலன்களுக்கானகாப்புக்கோவை" என்பது, ஐஎம்ஓ வழிகாட்டு நெறிகளுக்கிணங்க இலங்கையில் வகுத்தமைக்கப்படுவதும், நிர்மாணநியமங்கள், கலப்பக்கத்தின் பாகம், நிலையுறுதியும் நீர்புகாத் திடத்தன்மையும், எந்திரத்தொகுதி, தீப்பாதுகாப்பு, உயிர்க்காப்புச் சாதனங்கள், நானாவித முறைமைகளும் சாதனத் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளும், படகுத்தலைவர்களுக்கும் பொறியியலாளர்களுக்கும் உரிமமளித்தல்,ஆளமர்த்தலும் வேலைமணித்தியாலங்களும் என்பவற்றைக் குறித்துரைக்கின்றதுமான ஓர் ஆவணம் என்றுபொருளாகும்;

"பொழுதுபோக்குக் கலன்கள்" என்பது, சிறியவர்த்தகக் கலன்களுக்கான காப்புக் கோவையில் பொழுதுபோக்குக் கலன்களாகப் பெயர்குறிக்கப்பட்டகலன்கள் என்று பொருளாகும் ;

"கப்பல்கள் பதிவாளர் " என்பது, வணிககப்பற்றொழில் பணிப்பாளர்தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"சிறிய வர்த்தகக் கலன்" என்பது, நீளத்தில் 24 மீற்றர்களுக்குக் குறைந்தனவாகவும்,ஆனால் 5 மீற்றர்களாக அல்லது அதற்குமேற்பட்டனவாகவும் இருப்பனவும், 100 க்குமேற்படாத பயணிகளைக் கொண்டு செல்கின்றனவும், அல்லது இலங்கை கரையோர நீர்ப்பரப்புகளில் ஈடுபட்டுள்ள 20 பயணிகள் வரையானவர்களுக்கு இரவில் தங்கியிருப்பதற்கான இடவசதியை வழங்குகின்றனவுமான சரக்கு, அல்லது பயணிக் கலன்களாக உள்ளகலன்கள் என்று பொருளாகும்.

**அட்டவணை I** (ஒழுங்குவிதி 5)

| | **இலங்கை கரையோர நீர்ப் பரப்புகளின் மீதான சிறிய வர்த்தகக் கலன்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்** | |
|---|---|---|
| 1. | கலத்தின் தற்போதையப்பெயர்: | |
| 2 | பதிவகத் துறைமுகம்: | |
| 3. | உத்தேசிக்கப்பட்டபுதியபெயர்: | |
| 4. | கலத்தின் முன்னை நாட் பெயர்கள்: | |
| 5. | சொந்தக்காரரின் பெயரும் முகவரியும்: | |
| 6. | ஐஎம்ஓ இலக்கம்: | |
| 7. | கூட்டிணைக்கின்ற கம்பெனியின் நாட்டின நாடு: | |
| 8. | தவிசாளரின்/தலைவரின் பெயர்/முகவரிமற்றும் நாட்டினம்: | |
| 9. | பணிப்பாளர்களின் பெயர்கள்/முகவரிமற்றும் நாட்டினம்: | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6. |
| 10. | கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனம்: | |
| 11. | கம்பெனியின் முகாமையாளரினது பெயர்/ முகவரிமற்றும் நாட்டினம்: ரெலெக்ஸ் இல:/ கேபள் முகவரி: | |
| 12. | தொழிற்படுத்துநர்களின் பெயர்கள்: | |
| 13. | கலத்தைக் கட்டியமைத்தவரின் பெயரும் முகவரியும்: | |
| 14. | கலத்தின் விபரங்கள்:<br>1. கலத்தின் வகை:<br>2. அனுமதிக்கப்பட்டபயணிகளின் எண்ணிக்கை:<br>3. சேவையின் வகை:<br>4. வேகம்: | |
| 15. | கலத்தின் விளக்கங்கள்:<br>1. கட்டியமைக்கப்பட்டதேதி:<br>2. கட்டியமைக்கப்பட்ட இடம்:<br>3. உடற்பகுதியின் வகை:<br>4. பாய்மரங்களின் எண்ணிக்கை:<br>5. மேற்றளங்களின் எண்ணிக்கை:<br>6. முழுமொத்தத் தொன்னளவு:<br>7. தேறியதொன்னளவு:<br>8. மேற்றளத்தின் கீழானதொன்னளவு:<br>9. குறைவெடை:<br>10. பாழும் எடை:<br>11. கப்பற்றொகுதியினரின் எண்ணிக்கை: | |

**அட்டவணை I** *(தொடர்ச்சி)* (ஒழுங்குவிதி 5)

| | | |
|---|---|---|
| 16. | என்ஜின்களைக் கட்டியமைத்தவரின் பெயரும் முகவரியும்: | |
| 17. | என்ஜினின் விபரங்கள்:<br>1. என்ஜின்களின் எண்ணிக்கை:<br>2. என்ஜின்களின் விவரணம்:<br>3. உருளைகளின் எண்ணிக்கை:<br>4. விட்டம்:<br>5. உட்புழைக்குறுக்களவு:<br>6. கிலோவோட்: | |
| 18. | கொதிகலன்களினது அடையாளமிடுபவரின் பெயரும் முகவரியும்: | |
| 19. | எந்தநிருவாகத்திடமிருந்துகாப்புச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது: | |
| 20. | பீஅன்ட் ஐ களரியின் பெயரும் முகவரியும்: | |
| 21. | வானொலிஉரிமத்தைவழங்கியஉரிமமளிக்கும் அதிகாரியின் பெயரும் முகவரியும் ஏற்புடையதாயின்,: (கலத்துக்கான அலுவலகமுறையான இலக்கத்துக்கும் அழைப்புச் சைகைக்குமானவிண்ணப்பத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்) | |
| 22. | சொத்தாண்மைக்கானஎண்பிப்பு:(மூல விற்பனை உண்டியலும் நிர்மாண/<br>கட்டியமைத்தவரின் சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்) | |
| 23. | கலத்தின் தலைவர் பெயர் : நாட்டினம்:<br>வயது:<br>தகுதிச்<br>சான்றிதழின்<br>விபரங்கள்:வழங்குகின்றஅதிகாரி:வழங்குகைத் தேதி: | |
| 24. | கலத்தின் பொறியியலாளரின் பெயர் :<br>நாட்டினம்:<br>வயது:<br>தகுதிச் சான்றிதழின் விபரங்கள்:<br>வழங்குகின்ற அதிகாரி:<br>வழங்குகைத் தேதி: | |

..................................என்னுமிடத்தைச் சேக்ஷந்த............................ ஆகியநான், இதன்கண் குறிப்பிடப்பட்டகலத்தைப் பதிவுசெய்வதற்கானவிண்ணப்பத்தை இத்துடன் சமக்ஷப்பிக்கின்றேன். மேற்குறிப்பிடப்பட்டவிபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரைஉண்மையானவையும் செம்மையானவையும் எனச் சான்றுப்படுத்துகின்றேன்.

பெயர்: கையொப்பம்

முகவரி:

நாட்டினம்:

திருமணமானவரா/திருமணமாகாதவரா?

திகதி :

**அட்டவணைII** (ஒழுங்குவிதி 5)

| | | | |
|---|---|---|---|
| (அ) | பதிவு: என்ரிஒன்றுக்கு | ஐ. அ. நா டொலர் | 1 |
| | குறைந்தபட்சக் கட்டணம் | ஐ. அ. நா டொலர் | 750 |
| | அதிகபட்சக் கட்டணம் | ஐ. அ. நா டொலர் | 10,000 |
| (ஆ) | வருடாந்தஆய்வுக் கட்டணங்கள் | ஐ. அ. நா டொலர் | 500 |
| (இ) | ஆய்வுச் சான்றிதழின் வழங்குகை: | ஐ. அ. நா டொலர் | 100 |
| (ஈ) | பயணக் கட்டணங்கள் : | | |
| | (அ) நாளொன்றுக்குப் பயணியொருவருக்கு - | ஐ. அ. நாடொலர் | 8 |
| | (ஆ) நாளொன்றுக்குக் கப்பற்றொகுதி உறுப்பினரொருவருக்கு - | ரூபா | 20. |

05- 514

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.